**தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மூலதன செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடு ரூபா 900,000 ஆன போதிலும், அவற்றுள் ரூபா 618,335 அல்லது 69 சதவீதம் எஞ்சியிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டியமை. | செலவின விடயங்களின் 25 சதவீதமான நிதியேற்பாட்டினை செலவிடாது வைத்திருக்குமாறு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது என்பதும் விசேட பயிற்சி தேவைப்பாடொன்று ஏற்படவில்லை என்பதும் 2019 ஆம் ஆண்டினுள் புதிய சட்ட உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமை யினாலும் நிதியேற்பாடுகள் எஞ்சியருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தவறான தகவல்கள் மற்றும் அது தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணியொன்றுக்குரிய செயல் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிராததுடன் அந்த பணி மீளாய்வாண்டின்இறுதி வரையிலும் பூர்த்தி செய்ய முடியாது காணப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை உரிய முறையில் நிறைவேற்றும் தேவைப்பாடு | 2009 இல் 23 ஆம் இலக்க இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் வரைபாக்கல் பணிகள் சட்ட வரையுனரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதும், 2019 நவம்பர் மாதத்தின் பின்னர் புதிய அரசு ஆட்சிக்கு வந்தமையால் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என சட்ட வரையுனரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், 2020 பெப்ரவரி முதல் 2020 ஆகஸ்ட் வரையிலும் பாராளுமன்றம் கூட்டப்படாமையால் அந்த காலத்தில் அந்த பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமையும் எதிர்காலத்தில் அந்த அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் நிலவும் 05 சட்ட வரைபுகளின் திருத்த நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் புதிய பணிப்பாளர் சபையொன்று 2019 திசெம்பர் மாதம் முதல் நியமிக்கப்பட்டமையால் அந்த புதிய பணிப்பாளர் |

சபையின் அங்கீகாரத்தினை பெற்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் 2020.10.02 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கு 2020.10.26 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் அந்த அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டத்தை வரைபாக்குமாறு சட்ட வரைபுனருக்கு 2020.11.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு வணிக சொத்துக்கள் பரிமாற்றப்படும் நிலையத்தின் முகாமைத்துவக் கட்டமைப்பினை மாற்றும் அதிகாரச்சட்டத்தினை வரைபாக்குவதற்காக புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதால் புதிய அரசின் கொள்கையின் பிரகாரம் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பாதுகாக்கப்பட்ட பரிமாற்றல்கள் சட்ட வரைபு அதிகாரச் சட்டங்கள் 07 இனை கொண்ட 04 அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட வரைபு ஒன்றாக காணப்படுவதுடன் 2019 நவம்பர் மாதத்தின் பின்னர் புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டமையால் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்

கொள்ளப்பட வேண்டும் என்பதால் அந்த அமைச்சினால் புதிய அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியம சட்ட வரைபுகளுக்காக புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2020.09.07 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்து என்பதும் அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. நிதித் துறையின் ஒழுங்குபடுத்துனர்களின் தகவல் பரிமாற்றத்திற்கான சட்ட வரைபிற்காக இலங்கை மத்திய வங்கியினால் புதிய திருத்தங்கள் அனுப்பப்பட்டுள்ளமையால் அந்த திருத்தங்களையும் உள்ளடக்கி அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கான அமைச்சரவை விஞ்ஞானபனமொன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியில் 04 அல்லது 21 சதவீதமான வெற்றிடம் நிலவியதுடன் அந்த வெற்றிடங்களில் 02 உயர்மட்ட பதவிகளுக்கு உரியது ஆகும். | செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமேற்படுத்தும் பதவியணியிலான வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | • பணிப்பாளர் நாயகத்தின் பதவி அமைச்சரவையால் நியமிக்கப்பட வேண்டிய பதவியொன்றாகும்.<br>• வெற்றிடமாகவுள்ள 02 சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2020.01.01 ஆந் திகதி இரு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.<br>• அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக சட்ட பட்டதாரியொருவர் தேவைப்படுவதால் அவரை பெற்றுக் கொள்வதிலுள்ள அசளகரியத்தின் காரணமாக உத்தியோகத்தர் ஒருவர் இணைப்புச் செய்யப்படவில்லை.<br>• அமைச்சரவையினால் பணிப்பாளர் நாயகத்தினை நியமிக்கும் சந்தர்ப்பத்தில் வெற்றிடமாகவுள்ள சாரதி பதவியையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

- அதன் பிரகாரம் இதுவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நிலவும் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஆக காணப்படுவதுடன் அவற்றுள் 02 சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் மாத்திரம் காணப்படுகின்றன.